Kerosene, etc., seized in Madras

* 147 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that large stocks of petrol and kerosene were seized from unauthorised salesmen in Madras around 17th February 1973; and

(b) if so the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) 13—2—1973 அன்று சென்னை மாநகரின் நான்கு வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. அச் சோதனைகளின்போது மொத்தம் 3,675 லிட்டர் மண்ணெண்ணெய், 287 லிட்டர் பெட்ரோல், 125 லிட்டர் டீசல் எண்ணெய், 55 லிட்டர் எஞ்சின் எண்ணெய் ஆகியவை கைப்பற்றப்பட்டன. காவலர்களால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

மதுரை பால் பண்ணை

* 148 **வின.—திரு. த. சோணையா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பால்பண்ணைக்கு எந்தெந்த மாவட்டங்களிலிருந்து, எத்தனை சங்கங்களிலிருந்து பால் வருகிறது?

(இ) மதுரை பால் பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு எத்தனை லிட்டர் பால் வருகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மதுரை பால் பண்ணைக்கு மதுரை மாவட்டத்தில் 171 சங்கங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 53 சங்கங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 18 சங்கங்களும் பால் வழங்குகின்றன.

(இ) இப்பால் பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு 23,099 லிட்டர் பால் வருகிறது.

திரு. த. சோணையா: கிராமங்களிலிருந்து பால் பண்ணைகள், மதுரை போன்ற நகரங்களுக்கு எல்லா பாலையும் கொண்டு போய் விடுகிற காரணத்தால், கிராமங்களில் பால் கிடைப்பதில்லை.

1974 சனவரி 24]

எனவே, கிராமங்களிலிருக்கின்ற அந்தந்த பால் பண்ணைகள், அந்த கிராமத்திலே விரும்புகிறவர்களுடைய வீடுகளுக்குச் சென்று பால் கொடுக்கின்ற முறையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கிராமங்களிலிருக்கின்ற பால் வழங்குகிற கூட்டுறவு சங்கங்கள் அந்தந்த கிராமங்களுக்குத் தேவையான பாலை வழங்கி, மீதமுள்ள பாலைத்தான் பால் பண்ணைகளுக்குத் தருகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கிற இடங்களில் இப்படித்தான் ஏற்கனவே நடைபெற்று வருகிறது. மேலும், கிராமப்புறங்களில் பால் வளத்தைப் பெருக்குவதற்காகவும், எல்லா கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலம் மக்கள் பயன் அடைகின்ற வகையிலும் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் அரசாங்கத்தின் திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன.

Price of milk in Madras

*149 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious and Endowments be pleased to state—

(*a*) whether the prices of the milk supplied in Madras by the Dairy Corporation has been increased from the middle of April 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) ஆம். பாற்பண்ணைக் கழகம், பாலின் விலையை 1973 எப்ரல் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து உயர்த்தியுள்ளது.

(இ) தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் தான் வழங்கும் பல வகையான பாலின் விலைகளைக் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது.

புட்டிப்பால்.	லிட்டர் ஒன்றுக்கு முன்பிருந்த விலை.	லிட்டர் ஒன்றுக்கு மாற்றியமைக்கப் பட்ட விலை.	கொழுப்பு சத்தின அளவு.	கொழுப்பு சத்து அல்லது பிற சத்துக்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
	ரூபாய்.	ரூபாய்.	சத விகிதம்.	சத விகிதம்.
(அ) தரப்படுத்தப்பட்ட பால்.	1·30	1·50	4·5	8·5
(இ) தரம் உயர்த்தப் பட்ட பால்.	1·00	1·20	3·0	8·5